# October 27, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஜார்கண்டில் நிறைவடைந்த 4– ஆவது தெற்காசிய தடகள சாம்பியன்ஷிப்பில், இந்தியா 20 தங்கம், 20 வெள்ளி, 18 வெண்கலம் என 58 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்து நிறைவு செய்தது.
2. ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் கபடியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த அபினேஷ் மோகன்தாஸ், கார்த்திகா ரமேஷ் ஆகியோருக்கு தலா ரூ.25 லட்சம் ஊக்கத் தொகையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.
3. பஹ்ரைனில் நடைபெறும் ஆசிய யூத் விளையாட்டுப் போட்டிகளில், பளுதூக்குதலில் இந்தியாவின் பிரீத்திஸ்மிதா போய், தங்கப் பதக்கம் வென்றார். அதற்கான முயற்சியில் அவர் உலக சாதனையும் படைத்தார்.
4. குஜராத் மற்றும் ராஜஸ்தானை ஒட்டிய பாகிஸ்தான் எல்லையில் இந்திய ராணுவம், விமானப்படை மற்றும் கடற்படை ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் 'திரிசூல்' கூட்டுப்பயிற்சி அக்.30-ஆம் தேதி தொடங்கி நவ.10-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.
   i. சர் கிரீக் எல்லையில் பாகிஸ்தான் அத்துமீற நினைத்தால் அவர்களின் வரலாறும் புவியியலும் மாறும் நிலை ஏற்படும் என பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அண்மையில் எச்சரித்த நிலையில், வருடாந்திர திரிசூல் பயிற்சி தொடங்கவுள்ளது.
   ii. குஜராத்தின் கட்ச் பகுதி-பாகிஸ்தான் இடையே அமைந்துள்ள 96 கி.மீ. தொலைவுடைய சர் கிரீக் செக்டாரில் கடல் எல்லை தொடர்பாக இருநாடுகளிடையே நீண்ட காலமாக பிரச்னை நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.
5. நாட்டு மக்கள் 140 கோடி பேருக்கும் ஒற்றுமையின் சக்தியை நிரப்பும் தேசிய பாடலான வந்தே மாதரம், 150 ஆண்டுகளுக்கு முன் பங்கிம் சந்திர சட்டர்ஜியால் இயற்றப்பட்டு, ரவீந்திர நாத் தாகூரால் முதல் முறையாக கடந்த 1896-இல் பாடப்பட்டது. இப்பாடல் இயற்றப்பட்டதன் 150-ஆவது ஆண்டு கொண்டாட்டங்கள், நவம்பர் 7-ஆம் தேதி தொடங்குகின்றன. இதையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.
   i. இரும்பு மனிதர் சர்தார் வல்லபபாய் படேலின் 150-ஆவது பிறந்த நாள் அக்டோபர் 31-ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது.
   ii. நமது பாதுகாப்புப் படைகளில் நாட்டு நாய் இனங்களின் பயன்பாடு அதிகரிக்கப்பட்டுள்ளது.
   iii. பெங்களூரில் உள்ள மத்தியரிசர்வ் போலீஸ் படையின் நாய்கள் பயிற்சிப் பள்ளியில் கோம்பை (தமிழகம்), முதோல் ஹௌன்ட் (கர்நாடகம்) பாண்டிகோனா (ஆந்திரம்) போன்ற நாட்டு ரகநாய்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

iv. நவம்பர் 15-ஆம் தேதி பழங்குடியினர் பெருமைதினம் (பழங்குடியினத் தலைவர் பிர்சா முண்டா பிறந்த தினம்) கொண்டாடப்பட உள்ளதையும் பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார்.

6. சீன தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள இந்திய தூதரகத்தில், அந்நாட்டின் பிரபல சிற்பி யுவான் ஷிகுன் செதுக்கிய இந்தியாவின் புகழ்பெற்ற கவிஞர் ரவீந்தி ரநாத் தாகூரின் மார்பளவுச் சிலை திறக்கப்பட்டுள்ளது.

i. தற்போது இந்திய தூதரகத்தில் தாகூரின் சிலையைச் செதுக்கிய சிற்பி யுவான் ஷிகுன், மகாத்மா காந்தி புத்தகத்தைக் கையில் வைத்திருக்கும் தனித்துவமான அமர்ந்த நிலையில் உள்ள சிலையையும் உருவாக்கியுள்ளார். இந்தச் சிலை 2005- ஆம் ஆண்டு சாவோயாங் பூங்காவில் நிறுவப்பட்டது. பெய்ஜிங் இந்திய தூதரகம் ஒவ்வோர் ஆண்டும் இங்குதான் காந்தி ஜெயந்தியைக் கொண்டாடுகிறது.

7. செஷல்ஸ் புதிய அதிபராக பேட்ரிக் ஹெர்மினி பதவியேற்றார். இந்த விழாவில் இந்தியா சார்பில் குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்றார்.

8. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முன்னிலையில், தாய்லாந்து- கம்போடியா இடையே விரிவான சண்டை நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

i. 'ஆசியான்' கூட்டமைப்பில் புரூணே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பின்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியத்நாம் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் கூட்டமைப்பின் உச்சிமாநாடு மற்றும் அதுசார்ந்த பிற மாநாடுகள் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் ஞாயிற்றுக்கிழமை (அக். 26) தொடங்கியது. செவ்வாய்க்கிழமை (அக். 30) வரை நடைபெற உள்ளது.

ii. இந்நிலையில், அமெரிக்க அதிபராக 2-ஆவது முறை பதவியேற்ற பின்னர், முதல்முறையாக ஆசியாவுக்கு டிரம்ப் பயணம் மேற்கொண்டுள்ளார். இதன் ஒரு பகுதியாக 13-ஆவது ஆசியான்- அமெரிக்க உச்சிமாநாட்டில் பங்கேற்க அவர் கோலாலம்பூர் வந்தார். அங்கு டிரம்ப் முன்னிலையில் தாய்லாந்து- கம்போடியா இடையே விரிவான சண்டை நிறுத்த ஒப்பந்தம் கையொப்பமானது.

iii. ஏற்கெனவே கடந்த ஜூலையில் இருநாடுகளுக்கும் இடையே சண்டை நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட நிலையில், தற்போது விரிவான ஒப்பந்தம் கையொப்பமானது.

iv. தாய்லாந்து-கம்போடியா இடையே எல்லை பிரச்னை இருந்து வரும் நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இரு நாடுகளும் பரஸ்பரம் தாக்குதலில் ஈடுபட்டன. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர்ப் பதற்றம் ஏற்பட்டது. எனினும் சண்டையை நிறுத்தாவிட்டால், இரு நாடுகளுக்கும் அமெரிக்க தரப்பில்பொருளாதார அழுத்தம் அளிக்கப்படும் என்று டிரம்ப் எச்சரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து, இரு நாடுகளும்

தாக்குதலைக் கைவிட்டன.

9.தொலை தூரம் செல்லக்கூடிய, தனித்து வமான அணுசக்தி என்ஜின் பொருத்தப்பட்ட புரேவெஸ்ட்னிக் எனும் கப்பலில் இருந்து ஏவப்படும் ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்ததாக ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் அறிவித்தார்.

i. மேலும், இந்த ஏவுகணையைப் பயன்படுத்துவதற்கான வசதிகளைத் தயார் செய்யுமாறு ஆயுதப் படைகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

ii. இந்த ராணுவ தலைமைத் தளபதி மற்றும் பிற ராணுவத் தளபதிகளுடன் தொலைக்காட்சியில் நாட்டு மக்களிடையே பேசிய அதிபர் புதின், அண்மையில் நடத்தப்பட்ட அணுஆயுதப் பயிற்சிகளின்போது, 'புரேவெஸ்ட்னிக்' ஏவுகணை 15 மணி நேரம் வானில் பறந்தது. அது 14,000 கிலோமீட்டர் தொலைவைக் கடந்து சென்று சோதனையில் வெற்றி கண்டது' என்று குறிப்பிட்டார்.

10.இந்தியாவில் விளைவிக்கப்படும் காபி ரகங்கள் உலக அளவில் பிரபலமடைந்து வருகின்றன. ஒடிஸாவின் கோராபுத் பகுதியில் விளையும் காபியின் சுவை அலாதியானது

i. கர்நாடகத்தின் சிக்கமகளூரு, கூர்க் மற்றும் ஹாசன், தமிழகத்தின் பழனி சேர்வராயன், நீலகிரி மற்றும் ஆனைமலைப் பகுதிகள், கர்நாடகம் தமிழகத்தின் எல்லையில் உள்ள பிலிகுரி கோளத்தின் வயநாடு, மலபார் பகுதிகள் என நாட்டில் பல்வேறு ரக காபி விளைவிக் கப்படுகிறது.

ii. நாட்டின் காபி உற்பத்தியில் 70 சதவீதத்துடன் கர்நாடகம் முதலிடம் வகிக்கிறது. அடுத்தடுத்த இடங்களில் கேரளம், தமிழ்நாடு உள்ளன நடப்பு நிதியாண்டின் ஏப்ரல்- செப்டம்பர் காலகட்டத்தில் காபி ஏற்றுமதி 12.5 சதவீதம் உயர்ந்துள்ளது.